SRI LANKA

**இலங்கை**

**கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2025**

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 03

# 3804 - நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## 3804 – நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**நான்கு (4) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி A**

## *வினா 01*

(1) ஒரு சீனப் பிரஜையான **லீ யான்** என்பவர் 2024 மே 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்கு இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் ஓர் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கொழும்பில் ஒரு தொடர்மாடிக் குடியிருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவருடைய சம்பளம் சீனாவில் உள்ள அவரது வங்கிக் கணக்கிற்கு தொடர்ச்சியாக வைப்புச் செய்யப்படுகிறது.

கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர், அவர் வரி மதிப்பாண்டு 2024/25 முழுவதும் இலங்கையில் தங்கியிருந்தார்.

(2) **நுவான்** என்பவர் **Redme PLC** இன் உற்பத்தித் தலைவராவார். வரி மதிப்பாாண்டு 2024/25 காலப் பகுதியில், அவர் வெளிநாட்டுத் தொழிற்சாலைகளின் பரிசீலனைக்காக பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வெளியே பயணம் செய்துள்ளார். அவரது பயண விபரங்கள் கீழ்வருமாறு :

| **இலங்கையில் இருந்து புறப்பட்ட திகதி** | **இலங்கைக்கு வந்த திகதி** |
|---|---|
| 25.04.2024 | 25.06.2024 |
| 01.08.2024 | 10.10.2024 |
| 15.01.2025 | 05.03.2025 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக இலங்கையின் வரி விதிப்பு நோக்கத்திற்காக மேற்படி தனிநபர்களின் வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** [05 புள்ளிகள்]

## *வினா 02*

(a) **சரத்** என்பவர் இலங்கையில் வதிவுள்ள ஒரு தனியாள் ஆவார். அவர் 2013 ஆம் ஆண்டு ரூ. 20 மில்லியனுக்கு காணி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார். 2015 ஆம் ஆண்டில், அவர் காணியைச் சுற்றி ரூ. 200,000/- செலவில் ஒரு மதில் சுவரைக் கட்டியுள்ளார். பின்னர், அவர் இந்தக் காணியை 2025 மார்ச் 15 ஆந் திகதி திறந்த சந்தைப் பெறுமதிக்குச் சமமான தொகையான ரூ. 30 மில்லியனுக்கு விற்பனை செய்தார். **சரத்** தரகுப் பணமாக ரூ. 100,000/- இனைத் தரகருக்குச் செலுத்தியிருந்தார். 2017 செப்ரெம்பர் 30 இல் காணியின் சந்தைப் பெறுமதி ரூ. 24 மில்லியன் ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

காணியின் விற்பனை தொடர்பில் **சரத்** செலுத்த வேண்டிய மூலதன நய வரியைக் (CGT) **கணிப்பிடுக.** [02 புள்ளிகள்]

(b) மார்ச் மாத காலப்பகுதியில், **ABC (Pvt) Ltd.** பின்வரும் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது :

- திரு. **சில்வாவுக்குச்** செலுத்திய அலுவலக வாடகை ரூ. 100,000/-.
- திருமதி. **மாயாதுன்னவுக்குச்** செலுத்திய ஆலோசனைக் கட்டணம் ரூ. 200,000/-.
- கம்பனியின் இலாபத்திலிருந்து செலுத்திய பங்கிலாபம் ரூ. 1,000,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஒவ்வொரு கொடுப்பனவு தொடர்பிலும் **ABC (Pvt) Ltd.** இனால் கழிக்கப்பட வேண்டிய முற்பண வருமான வரியைக் (AIT) **கணிக்குக.** [03 புள்ளிகள்]

[மொத்தம் 05 புள்ளிகள்]

## *வினா 03*

**All (Pvt) Ltd.** என்பது கைக்கடிகாரங்களை இறக்குமதி செய்து, உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனி ஆகும். இக்கம்பனி பழுதுபார்ப்புச் சேவைகளையும் வழங்குகிறது.

கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகத் தரப்பட்டுள்ளன :

| | ரூ. |
|---|---:|
| கைக்கடிகாரங்களின் விற்பனை | 35,450,000 |
| பழுதுபார்ப்பு வருமானம் | 2,654,000 |
| செலுத்திய தவணைக் கொடுப்பனவுகள் | 200,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரிக்கான பதிவின் வருமான வரம்பைக் (turnover threshold) **குறிப்பிடுக.** [02 புள்ளிகள்]

(b) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரியைக் (SSCL) **கணிக்குக.** [03 புள்ளிகள்]

[மொத்தம் 05 புள்ளிகள்]

## *வினா 04*

(a) டிஜிடல் பொருளாதாரத்தின் எழுச்சியானது உலகளாவிய வர்த்தகத்தை மாற்றியமைத்துள்ளது. நிறுவனங்கள் இப்போது வாடிக்கையாளரின் நாட்டில் பௌதிக ரீதியான பிரசன்னத்தின் தேவையின்றி எல்லைகளைத் தாண்டி பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்க முடியும். இந்த மாற்றம் பாரம்பரிய வரி விதிகளை விஞ்சியுள்ளது. இதன் விளைவாக, டிஜிடல் வணிக மாதிரிகளிலிருந்து வருவாயை பயனுறுதி வாய்ந்த முறையில் கைப்பற்றுவதற்கு வரி முறைமைகளை நவீனமயப்படுத்த அரசாங்கங்கள் முயல்வதால், டிஜிடல் வரி விதிப்பு உருவாகியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

டிஜிடல் பொருள்கள் மற்றும் சேவைகள் கொண்டுள்ள மூன்று (03) வரிச் சவால்களை **விபரிக்குக.**

[03 புள்ளிகள்]

(b) தனியாள் முற்பண வருமான வரி (APIT) முறைமையானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் (திருத்தச்) சட்டத்தின் குறித்த ஏற்பாடுகளுடன் (திருத்தப்பட்ட) இணங்குவதற்கு ஊழியர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

APIT இன் கீழ் ஒரு தொழில்தருநரின் இரண்டு (02) கடப்பாடுகளைக் **குறிப்பிடுக.** [02 புள்ளிகள்]

[மொத்தம் 5 புள்ளிகள்]

***பகுதி A முடிவு***

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 05***

**GiGi (Pvt) Ltd.** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இக்கம்பனியால் வரி மதிப்பாண்டு 2022/23 இற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரித் திரட்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நிராகரித்ததுடன் அண்மையில் ஒரு கணக்காய்வை நடத்தி, உதவி ஆணையாளர் மதிப்பீடொன்றையும் வழங்கியிருந்தார். ஆயினும் உதவி ஆணையாளரால் வழங்கப்பட்ட மதிப்பீடு தொடர்பில் கம்பனி திருப்தியடையவில்லை.

கம்பனியானது 5 ஆண்டுகள் தொழிற் தகைமை அனுபவத்துடன் ஏஏரீ ஸ்ரீ லங்காவின் உறுப்பினராகவுள்ள **ஜிஹான் பெரேராவை** கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்த அதன் வரி ஆலோசகராக நியமிக்க விரும்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கம்பனிக்கு இருக்கக்கூடிய அடுத்த கட்ட நடவடிக்கைகளைக் **கோடிட்டுக் காட்டுக.**

*(பல்வேறு மட்டங்களில் தொடர்புடைய மேன்முறையீட்டுச் செயன்முறை மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்குமான காலக்கெடுக்கள் ஆகியவற்றை உள்ளிடவும்.)* [04 புள்ளிகள்]

(b) தவறிய வரிகளை வசூலிப்பதற்கு இருக்கக்கூடிய மூன்று (03) முறைகளைப் **பட்டியலிடுக.**

[03 புள்ளிகள்]

(c) **ஜிஹான் பெரேரா GiGi (Pvt) Ltd.** இன் ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக'' செயற்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** [03 புள்ளிகள்]

[மொத்தம் 10 புள்ளிகள்]

## *வினா 06*

**Sri Products (Pvt) Ltd.** என்பது பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இது மருந்தக மற்றும் அழகுசாதனப் பொருள்களைத் தயாரித்து, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது.

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் **Sri Products (Pvt) Ltd.** இனால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களின் (VAT உள்ளடக்கப்படாத) விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **ரூ.** |
|---|---:|
| ஏற்றுமதி விற்பனை – அழகுசாதனப் பொருள்கள் | 11,000,000 |
| ஏற்றுமதி விற்பனை – மருந்தகப் பொருள்கள் | 7,500,000 |
| உள்நாட்டு விற்பனை – மருந்தகப் பொருள்கள் | 1,543,000 |
| உள்நாட்டு விற்பனை – அழகுசாதனப் பொருள்கள் | 17,625,000 |
| இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்கு (SVAT) பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 4,587,000 |

(2) ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி பின்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியுள்ளது :

| | **ரூ.** |
|---|---:|
| மூலப்பொருள்களின் இறக்குமதி மீது | 2,654,000 |
| மூலப்பொருள்களின் உள்நாட்டுக் கொள்வனவு மீது | 465,000 |
| முகாமைத்துவப் பணிப்பாளர்களின் காருக்கு மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்புகள் மீது | 12,000 |

(3) கம்பனி காலாண்டுடன் தொடர்புடைய அனைத்து SVAT செலவு உறுதிச்சீட்டுகளையும் சேகரித்துள்ளது.

(4) கம்பனி, மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக ரூ. 100,000/- இனைச் செலுத்தியுள்ளது.

(5) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT, ரூ. 37,650/- ஆகும்.

*(நியம VAT வீதம் 18% எனக் கருதுக.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## *வினா 07*

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், **நளினி** என்பவர் அவரது மூத்த மகளான **மேனகாவுடன்** இணைந்து **Fat Mama's Kitchen** என்ற உணவு வழங்கும் சேவையை ஆரம்பித்தார். **மேனகா,** பங்குடமைக்கான ஆரம்ப மூலதனமாக ரூ. 100,000/- இனைக் காசாக முதலீடு செய்தார். இவ்வியாபார மானது **நளினியின்** வதிவிடத்தில் இயங்குகிறது. அவர்கள் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர்.

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டிற்கான மொத்த இலாபம் - ரூ. 8,500,000/-.

(2) ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் செலவினங்கள் செய்யப்பட்டுள்ளன :

- பங்காளர்களுக்கான சம்பளங்கள்: **நளினி** - ரூ. 1,800,000/-
  **மேனகா** - ரூ. 2,400,000/-
- உதவியாளர்களுக்கான சம்பளங்கள் - Rs.3,000,000/-.
- சமையலறை உபகரணக் கொள்வனவு - ரூ. 250,000/-.
- ரூ. 100,000/- பெறுமதியான உணவுகள் சிறுவர் இல்லம் ஒன்றிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.
- பிற செலவினங்கள் - ரூ. 124,000/-.
  *(பிற செலவினங்கள் வரி நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கவை.)*
- திறைசேரி உண்டியல்கள் மீதான ஒரு வட்டி வருமானமாக ரூ. 132,000/- இனை **நளினி** பெற்றுக் கொண்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியைக் **கணிக்குக.** (08 புள்ளிகள்)

(b) வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக **நளினி** செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரியைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *பகுதி B முடிவு*

**இரண்டு (2) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் - 50 புள்ளிகள்)

**பகுதி C**

## *வினா 08*

**Rasara Food (Pvt) Ltd. (RFPL)** என்பது இலங்கையில் வதிவுள்ள ஒரு கம்பனி ஆகும். இது பிரதானமாக ஏற்றுமதிச் சந்தைகளுக்கு உணவு பொருள்களைப் பதப்படுத்துகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **RFPL** இன் நிதிக் கூற்றுக்களில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **RFPL** இன் பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழ்வருமாறு :

| | **ரூ.** | **ரூ.** |
|---|---|---|
| ஏற்றுமதி வருமானம் | 138,500,000 | |
| உள்நாட்டு வருமானம் | 16,548,000 | 155,048,000 |
| கழி: விற்பனைக் கிரயம் | | (83,654,000) |
| **மொத்த இலாபம்** | | **71,394,000** |
| பிற வருமானம் | | 2,977,300 |
| கழி: நிருவாக மற்றும் பிற செலவினங்கள் | | (68,345,600) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **6,025,700** |
| நிதி வருமானம் | | 2,033,500 |
| நிதிக் கிரயம் | | (4,334,700) |
| **வரிக்கு முந்தைய நிகர இலாபம்** | | **3,724,500** |

(2) பிற வருமானம் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகிறது :

| | **ரூ.** |
|---|---|
| விலைகோரப்பட்ட முதலீடுகள் மீதான சீர் மதிப்பு நயம் (fair value gain) | 1,245,000 |
| பங்கிலாப வருமானம் | 542,000 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | 324,500 |
| பரிமாற்ற நயம் (exchange gain) | 865,800 |
| **மொத்தம்** | **2,977,300** |

(3) **RFPL** வரி மதிப்பாண்டு 2024/25 காலப்பகுதியில் இயந்திரமொன்றை ரூ. 400,000/- இற்கு விற்பனை செய்தது. இவ்வியந்திரம் வரி மதிப்பாண்டு 2019/20 இல் ரூ. 1,450,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

(4) பரிமாற்ற நயம் என்பது பரிமாற்ற நயம் மற்றும் நட்டம் ஆகிய இரண்டிற்குமான சீராக்கத்தின் பின்னர் உள்ள நிகரத் தொகை ஆகும். விபரங்கள் பின்வருமாறு :

- தேறாத பரிமாற்ற நட்டம் ரூ. 3,450,000/-.
- தேறிய பரிமாற்ற நயம் ரூ. 4,315,800/-.

(5) பின்வரும் விபரங்கள் விற்பனைக் கிரயம், நிருவாக மற்றும் பிற செலவினங்கள் தொடர்பாகத் தரப்பட்டுள்ளன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூ. 4,200,000/- ஆக இருந்தது.
- காணிக் குத்தகையின் (காணிப் பயன்பாட்டு உரிமை) மதிப்புக் குறைப்பு (amortization) ரூ. 730,000/- ஆக இருந்தது.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 4,500,000/- உம் ஓய்வு பெற்ற ஊழியருக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 1,234,000/- உம் ஆக இருந்தது.
- கம்பனி, தொழிலாளர் தொடர்பான விடயமொன்றுக்காக பெற்றுக்கொண்ட ஆலோசனை மீது ஆலோசகருக்குச் செலுத்திய கட்டணம் ரூ. 300,000/- ஆகும். கம்பனி, இந்தக் கொடுப்பனவு மீது நிறுத்தி வைத்தல் வரியைக் (WHT) கழித்திருக்கவில்லை.
- ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி, பல வரிக் கொடுப்பனவுகளைத் தாமதமாகச் செலுத்தியதற்கான தண்டப்பணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூ. 435,700/- இனைச் செலுதியுள்ளது.
- ஆண்டின் காலப்பகுதியில் ரூ. 2,280,000/- ஆனது அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட்டது. பதிவழிப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் போதுமான வசூலிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, 180 நாட்கள் கடன் காலப்பகுதியை விஞ்சிய கடன்பட்டோருக்காக ரூ. 1,000,000/- ஏற்பாடு செய்யப்பட்டது.
- கம்பனி, கிராமப்புறப் பாடசாலை ஒன்றின் புதிய நூலகத்திற்கு புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதற்காக ரூ. 650,000/- இனை CSR செலவினமாகச் செய்துள்ளது.
- வரி மதிப்பாண்டு 2021/22 இல் ரூ. 6,500,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 6 இயந்திரங்களில் பெரியளவிலான மாற்றங்களைச் செய்வதற்கென ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி ரூ. 1,476,000/- இனைச் செலவு செய்தது.

(6) நிதி வருமானத்தின் கூறுகள் :

| | ரூ. |
|---|---|
| திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீதான வட்டி | 1,265,000 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி | 768,500 |
| | **2,033,500** |

(7) நிதிச் செலவினங்களின் கூறுகள் :

| | ரூ. |
|---|---|
| வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 838,000 |
| தொடர்புடைய தரப்புக் கடன்கள் மீதான வட்டி | 1,645,700 |
| குத்தகைப் பொறுப்பின் பயன்பாட்டு உரிமை (ROU) மீதான வட்டி | 976,000 |
| வங்கிக் கட்டணங்கள் | 875,000 |
| | **4,334,700** |

(8) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கூறுகள் :

| | **2025 மார்ச் 31 இல் கிரயம் (ரூ.)** |
|---|---|
| காணிக் குத்தகை – சொத்துப் பயன்பாட்டு உரிமை | 14,600,000 |
| இயந்திரம் | 8,950,000 |
| அலுவலக உபகரணம் | 536,000 |
| கணினிகள் | 657,000 |
| மோட்டார் வாகனங்கள் | 6,800,000 |
| | **25,043,000** |

(9) ஆண்டின் காலப்பகுதியில், ஒரு புதிய ஆதனம் குத்தகைக்கு எடுக்கப்பட்டதுடன் ROU சொத்துக்கான சேர்த்தல் ஆனது ரூ. 14,600,000/- ஆக இருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் செலுத்திய உண்மையான குத்தகை வாடகை ரூ. 1,650,000/- ஆக இருந்தது.

(10) ஆண்டின் காலப்பகுதியில், ஒரு இயந்திரம் ரூ. 2,450,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(11) கம்பனித் தலைவரின் பாவனைக்காக ரூ. 6.8 மில்லியன் பெறுமதியான ஒரு மோட்டார் கார் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டது.

(12) வரி மதிப்பாண்டு 2021/22 இல் ரூ. 6,500,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தைத் தவிர, 2024 ஏப்ரல் 01 இல் இருந்த அனைத்துச் சொத்துக்களும் வரி நோக்கங்களுக்காக முற்றாகத் தேய்மானஞ் செய்யப்பட்டன.

(13) 2025 மார்ச் 31 இல் உரிமையாண்மை மற்றும் கடன் பெறுகைகளின் விபரங்கள் கீழ்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| பங்கு மூலதனம் | 1,000,000 |
| கைக்கொள் இலாபம் | (865,000) |
| | 135,000 |
| வங்கிக் கடன்கள் | 2,000,000 |
| தொடர்புடைய தரப்புக் கடன் | 3,000,000 |

(14) முன்னைய வரி மதிப்பாண்டுகளிலிருந்து முன்கொணரப்பட்ட வணிக நட்டங்கள் (வரி நோக்கங்களுக் காகச் சீராக்கப்பட்டது) பின்வருமாறு :

| **வரி மதிப்பாண்டு** | **ரூ.** |
|---|---|
| 2021/22 | 2,435,000 |
| 2022/23 | 1,354,000 |

(15) வரி மதிப்பாண்டு 2024/25 காலப் பகுதியில், வருமான வரி தவணைக் கொடுப்பனவுகளாக **RFPL** ஆனது ரூ. 2,500,000/- இனைச் செலுத்தியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக **Rasara Food (Pvt) Ltd.** இன் பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரி மதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்.

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி.

***(குறிப்பு :*** *ஏதாவது செலவினங்களை அனுமதிப்பதற்கு அல்லது அனுமதியாது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.)*

(25 புள்ளிகள்)

## *வினா 09*

**மஞ்சுள** என்பவர் ஒரு பட்டயக் கணக்காளர் ஆவார். இவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக வெளிநாட்டு வங்கி ஒன்றின் இலங்கைக் கிளையில் நாட்டு முகாமைத்துவ அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

கீழ்வரும் தகவல்கள் வரி மதிப்பாண்டு 2024/25 *(இதன் பின்னர் ''ஆண்டு'' எனக் குறிப்பிடப்படும்)* இற்கான **மஞ்சுள** தொடர்பில் தரப்பட்டுள்ளன :

(1) **ஊழியத்திலிருந்தான வருமானம் :**

- அடிப்படைச் சம்பளம் : மாதமொன்றுக்கு ரூ. 400,000/-.
- 2024 ஏப்ரலில், அவர் ரூ. 200,000/- மிகையூதியத்தைப் பெற்றுள்ளார். இது 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்திலிருந்து பகிரப்பட்டதாகும்.
- தனது சொந்த வாகனத்தைப் பயன்படுத்த வாகனப் படியாக (vehicle allowance) மாதாந்தம் அவருக்கு ரூ. 50,000/- செலுத்தப்படுகிறது.
- அவருக்கு வாடகை இல்லாத வதிவிடமொன்று வழங்கப்பட்டுள்ளது. வதிவிடத்தின் உரிமையாளருக்கு வாடகையாக மாதாந்தம் ரூ. 75,000/- இனை தொழில்தருநர் செலுத்துகிறார்.
- வரி மதிப்பாண்டுடன் தொடர்புடைய தொலைபேசிக் கட்டணத் தொகை ரூ. 172,000/- தொழில்தருநரால் மீளளிக்கப்பட்டது (reimbursed).
- **மஞ்சுளவின்** ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணம் தொழில்தருநரால் மீளளிப்புச் செய்யப்பட்டது. ஆண்டிற்கான மொத்த மீளளிப்புத் தொகை ரூ. 90,000/-.
- வரி மதிப்பாண்டு காலப்பகுதியில், **மஞ்சுள** பொருளாதார மாநாடு ஒன்றில் பங்குபற்ற இரண்டு நாள் பயணமாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு நாளொன்றுக்கான தங்குமிடச் செலவாக 400 அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டது. (1 அமெரிக்க டொலர் = இலங்கை ரூபா 300), விமானப் பயணச் சீட்டுச் செலவான ரூ. 500,000/- இனையும் தொழில்தருநர் வழங்கியிருந்தார்.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட தனியாள் முற்பண வருமான வரி (APIT) ரூ. 1,413,360/- ஆகும்.

(2) **வணிகத்திலிருந்தான வருமானம் :**

- **மஞ்சுள** பல்வேறு அச்சிடல் சேவைகளை வழங்குகின்ற வணிகமொன்றை நடத்திச் செல்கிறார். வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான புரள்வு மற்றும் நிகர இலாபம் என்பன முறையே ரூ.7,654,000 உம் ரூ. 1,481,000/- உம் ஆகும்.
- நிகர இலாபத்தைக் கணிக்கும்போது, பின்வரும் பரிவர்த்தனைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.
  - நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம்: ரூ. 875,000/-.
  - வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் அச்சிடல் இயந்திரமொன்று ரூ. 1,325,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த இயந்திரம் 2023 யூன் மாதம் ரூ. 1,800,000/- கிரயத்தில்

கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த விற்பனை மீதான கணக்கீட்டு இலாபமாக ரூ.152,000/- ஏற்பிசைவு செய்யப்பட்டது.

– "தேசிய சிறுநீரக நிதியத்திற்கு'' காசு நன்கொடையாக ரூ. 100,000/- வழங்கப்பட்டது.

- விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களுக்கானவை தவிர்ந்த, ஏனைய சொத்துக்கள் மீதான தேய்மானத்திற்கான மூலதன விடுதொகைகள் வரி நோக்கங்களுக்காக முற்றாக உரிமை கோரப்பட்டது எனக் கொள்க.
- வரி மதிப்பாண்டு 2023/24 இலிருந்து முன்கொணரப்பட்ட, அதே வணிகத்திலிருந்தான உரிமை கோரப்படாத வரிவிதி நட்டமாக ரூ. 350,000/- காணப்பட்டது.

(3) **மஞ்சுள** அவரது சொந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளார். 2022 ஏப்ரல் 01 இலிருந்து மாதாந்த வாடகை ரூ. 125,000/- ஆரம்பிக்கிறது. வரி மதிப்பாண்டிற்கான சோலைவரி ரூ. 20,000/- ஆக உள்ளதுடன் அது வாடகைக் குடியிருப்பாளரால் ஏற்கப்பட்டது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **மஞ்சுள** பின்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றுள்ளார் :

- திறைசேரி உண்டியல்கள் மீது : ரூ. 153,000/-.
- நிலையான வைப்பு மீது : ரூ. 80,750/- (நிகர) – நிறுத்தி வைத்தல் வரி / AIT கழிக்கப்பட்டது.

(5) **மஞ்சுள** அவரது முதலீடுகளில் இருந்து பின்வரும் வருமானங்களைப் பெற்றுள்ளார் :

- **மஞ்சுள** விலை கோரப்பட்ட பொதுக் கம்பனிகளில் உள்ள பங்குகளின் விற்பனை மீதான இலாபமாக ரூ. 184,000/- இனைச் சம்பாதித்துள்ளார்.
- விலை கோரப்பட்ட பொதுக் கம்பனிகளில் இருந்து பெற்ற பங்கிலாப வருமானம் (நிகர) 2025 சனவரியில் ரூ. 64,500/- ஆக இருந்ததுடன் பொருத்தமான AIT / WHT பங்கிலாப வருமானத்தில் இருந்து கழிக்கப்பட்டது.
- **மஞ்சுள** அவரது வீட்டின் மீது நிறுவப்பட்டுள்ள, தேசிய மின்தொகுப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மின்சக்திப் பெனல்களை வாங்குவதற்காகப் பெற்ற வங்கிக் கடனுக்கான வட்டி ரூ. 292,000/- இனைச் செலுத்தியிருந்தார். இந்தக் கடனின் மூலதன மீள்கொடுப்பனவு ரூ. 632,000/- ஆக இருந்தது.

(6) ஆண்டின் காலப்பகுதியில், **மஞ்சுள,** ஆதரவற்ற சிறுமிகளைப் பராமரிக்கின்ற ஓர் அங்கீகரிக்கப்பட்ட தரும ஸ்தாபனமான ‘உதயா சிறுவர் இல்லத்திற்கு’ ரூ. 100,000/- காசு, நன்கொடையாக வழங்கி யிருந்தார்.

(7) **மஞ்சுள** வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூ. 500,000/- செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக **மஞ்சுளவுக்கு** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிவிதி வருமானம்.

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி.

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரி விலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(குறிப்பு : ஏதாவது வருமானம் வரி விதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.)* (25 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

## செயல் வினைச்சொல் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

**இலங்கை**

**கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2025**

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 03

**3804 - நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல் (CPT)**

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு**

**நான்கு [04] கட்டாய வினாக்கள்**

[மொத்தம் 20 புள்ளிகள்]

**பகுதி - A**

***வினா 01 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 1 – இலங்கை வரிவிதிப்புக்கான அறிமுகம் மற்றும் வரிவிதிப்பின் வளர்ந்துவரும் போக்குகள்**

**கற்றற் பேறுகள் –** வரிவிதிப்பு பற்றிய வதிவிட விதியைப் பிரயோகித்தல்.

**(1)** உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 69 (1) இன்படி, ஒரு தனியாள் ஒரு வரி மதிப்பாண்டிற்காக இலங்கையில் வதிவுடையவராக இருக்க வேண்டுமாயின் அவர் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :

(a) இலங்கையில் வசித்தல்.

(b) ஆண்டின் காலப்பகுதியில் இலங்கையில் இருக்கிறார்களா, அந்த இருப்பு ஆண்டின் காலப்பகுதியில் தொடங்குகின்ற அல்லது முடிவடையும் எந்தவொரு பன்னிரெண்டு மாத காலப்பகுதியிலும் மொத்தம் 183 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலகட்டத்திற்குள் இருத்தல்.

(c) இலங்கை அரசாங்கத்தின் ஓர் ஊழியர் அல்லது ஓர் அதிகாரி மற்றும் அவரது வாழ்க்கைத் துணை ஆண்டின் காலப்பகுதியில் வெளிநாட்டில் பணியமர்த்தப்பட்டுள்ளாரா என்பது.

(d) வர்த்தகக் கப்பல் சட்டத்தின் வரையறைக்குள் உள்ள இலங்கை கப்பல் ஒன்றில் பணியமர்த்தப்பட்டுள்ள ஒரு தனியாள். அவர் ஆண்டின் காலப்பகுதியில் பணியமர்த்தப் பட்டுள்ளாரா?

தரப்பட்ட விவரணத்தின்படி, **Li Yan,** வரி மதிப்பாண்டு 2024/25 காலப்பகுதியில் 183 நாட்களுக்கு மேல் பௌதிக ரீதியாக இலங்கையில் இருந்துள்ளார். எனவே, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 69 (1) (b) இன் கீழ் வரி நோக்கத்திற்காக அவர் இலங்கையில் வதிவைக் கொண்டுள்ளார்.

**(2)**

| வந்த திகதி | சென்ற திகதி | இலங்கையில் இருந்த நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01.04.2024 | 25.04.2024 | 25 |
| 25.06.2024 | 01.08.2024 | 37 |
| 10.10.2024 | 15.01.2025 | 96 |
| 05.03.2024 | 31.03.2025 | 27 |
| | | **185** |

இலங்கையில் செலவிட்ட நாட்கள் - 185 நாட்கள்.

இலங்கையில் பௌதிக ரீதியாக இருந்த நாட்களின் எண்ணிக்கை 183 நாட்களை விட அதிகம். எனவே, வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரி நோக்கங்களுக்காக அவர் இலங்கையில் வதிவுடையவராக உள்ளார். **[05 புள்ளிகள்]**

***வினா 02 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| |
|---|
| **அலகு 6 – நிறுத்திவைத்தல் வரியும் (WHT) மூலதன நய வரியும்**<br>கற்றற் பேறுகள் - பொருத்தமான நிறுத்திவைத்தல் வருமான வரி, இறுதி வரிகளை மதிப்பிடுதல்<br>- சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தேறுகையில் இருந்தான நயம் அல்லது நட்டம் மீதான (மூலதன நயம்) வரியைக் கணிப்பிடுதல் |

**(a)** **(ரூ.)**

| | | | |
|---|---|---|---|
| பெற்ற மறுபயன் | | | 30,000,000 |
| 30.09.2017 இல் காணிப் பெறுமதி | 24,000,000 | | |
| MV அல்லது கிரயத்தில் உயர்ந்தது | | 24,000,000 | |
| தரகர் கட்டணம் | | 100,000 | |
| மொத்தக் கிரயம் | | | (24,100,000) |
| மூலதன நயம் | | | 5,900,000 |
| **மூலதன நய வரி** | **10%** | | **590,000** |

**[02 புள்ளிகள்]**

**(b)** வாடகைக்கு எந்தப் பொறுப்புமில்லை. ஏனெனில் தொகையானது மாதமொன்றுக்கு ரூ. 100,000/- இற்குச் சமமானதாகும்.

| | | | |
|---|---|---|---|
| ஆலோசனைக் கட்டணம் | - | 200,000 x 5% | Rs.10,000/- |
| பிரிக்கப்பட்டது | - | 1,000,000 x 15% | Rs.150,000/- |

**[03 புள்ளிகள்]**

**[மொத்தம் 05 புள்ளிகள்]**

***வினா 03 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| |
|---|
| **அலகு 7 – பெறுமதிசேர் வரியும் (VAT) வணிகத்தின் பிற வரிகளும்**<br>கற்றற் பேறுகள் - சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிக்குப் (SSCL) பொருத்தமான ஏற்பாடுகளை விபரித்தல், மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வையைக் கணிப்பிடுதல் |

**(a)** காலாண்டு ஒன்றுக்கு ரூ. 15 மில்லியன் அல்லது ஆண்டிற்கு ரூ. 60 மில்லியன். **[02 புள்ளிகள்]**

**(b)**

**All (Pvt) Ltd.**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியின் கணிப்பீடு**

| | |
|---|---:|
| இறக்குமதி மற்றும் விற்பனைப் புரள்வு | 35,450,000 |
| பழுதுபார்ப்பு சேவைகள் | 2,654,000 |
| பொறுப்பான புரள்வு (35,450,000 x 50% + 2,654,000) | 20,379,000 |
| செலுத்த வேண்டிய SSCL @ 2.5% | 509,475 |
| செலுத்திய தவணைக் கட்டணம் | (200,000) |
| **செலுத்த வேண்டிய மீதி** | **309,475** |

**[03 புள்ளிகள்]**

**[மொத்தம் 05 புள்ளிகள்]**

***வினா 04 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 1 - இலங்கை வரிவிதிப்புக்கான அறிமுகம் மற்றும் வரிவிதிப்பின் வளர்ந்துவரும் போக்குகள்**

**அலகு 6 - நிறுத்திவைத்தல் வரியும் (WHT) மூலதன நய வரியும்**

கற்றற் பேறுகள் - டிஜிடல் பொருள்கள் மற்றும் சேவைகளின் வரிச் சவால்கள் உட்பட, டிஜிடல் வரிவிதிப்பின் வெளிப்பாட்டை விபரித்தல்

- APIT இன் கீழ் தொழில்தருநர் ஒருவரின் கடப்பாடுகளை விபரித்தல்

**(a)** (1) டிஜிடல் வணிகங்கள் ஒரு நாட்டில் எந்தவொரு பௌதிக ரீதியான அலுவலகமோ அல்லது ஊழியர்களோ இல்லாமல் கணிசமான வருமானத்தை ஈட்ட முடியும். இதனால் வரி அதிகாரிகள் அதிகார வரம்பை உறுதிப்படுத்திக் கொள்வது கடினமானதாகும்.

(2) டிஜிடல் பரிவர்த்தனைகளில் மதிப்பு உருவாக்கப்படும் இடத்தைத் தீர்மானிப்பது கடினம், குறிப்பாக தரவு மற்றும் புலமைச் சொத்துக்கள் தொடர்பில் இது மிகவும் கடினமாகும். இது எல்லைகளுக்கு அப்பால் இலாபப் பண்பை சிக்கலானதாக்குகிறது.

(3) இலாப மாற்றம் – டிஜிடல் வணிகங்கள் பெரும்பாலும் மென்பொருள் மற்றும் காப்புரிமைகள் போன்ற அருவச் சொத்துக்களைப் பயன்படுத்தி அதிக வரி உள்ள நாடுகளிலிருந்து குறைந்த வரி உள்ள நாடுகளுக்கு இலாபத்தை மாற்றுகின்றன. இதனால் அவற்றின் ஒட்டுமொத்த வரிச் சுமை குறைவடைகிறது.

(4) வெளிநாட்டு டிஜிடல் சேவை வழங்குநர்களிடமிருந்து இணக்கத்தை உறுதி செய்வது கடினம், குறிப்பாக சர்வதேச அமுலாக்க உடன்படிக்கைகள் எதுவும் இல்லாதபோது மிகவும் கடினமானதாகும். **(3 சவால்கள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது, 03 புள்ளிகள்)**

**(b)**

(1) நடைமுறையில் உள்ள வரி அடுக்குகளின் (வரி அட்டவணைகளின்) அடிப்படையில் ஊழியர்களின் மாதாந்த ஊதியத்திலிருந்து தொழில்தருநர்கள் APIT ஐக் கணக்கிட்டு, கழித்தல் வேண்டும்.

(2) நிறுத்தி வைக்கப்பட்ட வரியானது அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன் IRD இற்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) வரி செலுத்த வேண்டிய ஒவ்வொரு ஊழியருக்கும், சம்மதம் தெரிவித்தவருக்கும் குறிப்பிட்ட படிவங்களில் முறையான பதிவுகளைப் பராமரிக்கவும் இந்தப் பதிவுகள் அத்தகைய பதிவுகள் தொடர்புடைய வரி மதிப்பாண்டின் இறுதியில் இருந்து ஐந்து ஆண்டுகள் காலப்பகுதிக்கு தக்கவைக்கப்படவும் வேண்டும்.

(4) உடன் அடுத்துவரும் ஆண்டின் ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன் வருடாந்த வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்க வேண்டும்.

(5) வரி மதிப்பாண்டின் இறுதியில் உடனடியாக அடுத்துவரும் ஏப்ரல் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், அல்லது ஊழியர் தனது வேலையை நிறுத்தியிருந்தால், வேலை நிறுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் ஊழியர்களுக்கு வரி கழித்தல் சான்றிதழை (T10 சான்றிதழ்) வழங்குதல். **(2 கடப்பாடுகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகின்றன, 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## *பகுதி A முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

## பகுதி B

***வினா 05 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 5 – கடப்பாடுகளும் நடைமுறைகளும்**

கற்றற் பேறுகள் - வரி நோக்கங்களுக்காக இலங்கையில் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளை அடையாளங் காணுதல்

- மதிப்பீடுகள் மற்றும் மேன்முறையீட்டுச் செயன்முறையை விபரித்தல்
- தவறிய வரி மற்றும் அறவீட்டு நடவடிக்கைகளை விபரித்தல்

**(a) நிருவாக மீளாய்வு :**

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 139 இன் படி, வழங்கப்பட்ட மதிப்பீடு தொடர்பில் கம்பனி திருப்திப்படவில்லை எனின், தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு ஆணையாளர் நாயகத்தைக் (CGIR) கோரலாம்.

மீளாய்வுக்கான கோரிக்கையானது வரி செலுத்துநர் தீர்மானத்தை அறிவித்து, 30 நாட்களுக்குப் பிந்தாமல் எழுத்து மூலம் CGIR இற்கு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அது செய்யப்படுவதற்கான பின்னணியையும் விபரமாகக் குறிப்பிட வேண்டும்.

**வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழு (TAC):**

IRA இன் பிரிவு 140 இன்படி, நிருவாக மீளாய்வின் தீர்மானத்தால் கம்பனி பாதிக்கப்பட்டிருந்தால், அல்லது நிருவாக மீளாய்வுக்கான கோரிக்கை செய்யப்பட்டு 7 மாத காலம் கடந்த பிறகு, CGIR இன் தீர்மானத்திலிருந்து 30 நாட்களுக்குள் அல்லது நிருவாக மீளாய்வுக்கான கோரிக்கை செய்யப்பட்டு 7 மாத காலம் கடந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் CGIR இற்கான ஒரு பிரதியுடன், கம்பனி TAG இடம் மேன்முறையீடு செய்யலாம்.

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தல் :**

IRA இன் பிரிவு 144 இன்படி, TAC இற்கு முன் இடம்பெறும் நடவடிக்கையில் எந்தவொரு தரப்பினரும் (கம்பனி அல்லது CGIR) TAC இன் தீர்மானத்தில் அதிருப்தி அடைந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு அறிவிப்பைத் தாக்கல் செய்யலாம், அந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்ட 1 மாதத்திற்குள் அல்லது TAC இற்கு மேன்முறையீடு செய்வதற்கான கோரிக்கை செய்யப்பட்டதிலிருந்து 90 நாட்கள் கடந்தும், TAC இடமிருந்து மேன்முறையீட்டுக் கோரிக்கைக்கு எந்தப் பதிலும் கிடைக்காதபோது TAC இற்கு முன் தொடரும் மற்றைய தரப்பினருக்கு அதன் பிரதியுடன், TAC இன் தீர்மானத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வது சட்டப் பிரச்சினையில் மாத்திரமே செய்யப்பட வேண்டும்.

**(2 நடவடிக்கைகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது, 04 புள்ளிகள்)**

**(b)** (1) நீதிமன்ற நடவடிக்கைகள்.

(2) வரி செலுத்துநரின் ஆதனத்திற்கு எதிரான நிறைவேற்றம்.

(3) கைப்பற்றப்பட்ட சொத்தினை விற்பனை செய்தல்.

(4) கொடுப்பனவுகளுக்கு எதிராக எதிரீடு செய்தல்.

(5) மூன்றாந் தரப்பு கடன்பட்டோரிடமிருந்து வசூலிப்பு.

**(3 முறைகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது, 03 புள்ளிகள்)**

**(c)** ஏஜரீ ஸ்ரீ லங்காவின் ஒரு உறுப்பினராக 10 வருட தொழிற் தகைமை அனுபவம் என்ற தேவைப்பாட்டைக் கொண்டிருக்காததால் வர்த்தமானி இல. 2194/50 இன் கீழ் **GiGi (Pvt) Ltd.** இன் ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக'' **ஜிஹான்** தொழிற்பட முடியாது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 06 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 7 – பெறுமதிசேர் வரியும் (VAT) வணிகத்தின் பிற வரிகளும்**

கற்றற் பேறுகள் - VAT இலிருந்து விலக்களிக்கப்பட்ட, உள்ளடக்கப்படாத வழங்கல்களின் பூச்சிய மதிப்பீட்டுடனான VAT இன் பதிவு, கணிப்பீடு, பல்வேறு கடப்பாடுகளை விபரித்தல்

- கம்பனியின் அல்லது தனிநபரின் செலுத்தவேண்டிய VAT மீதியை கணிப்பிடுதல்

**Sri Products (Pvt) Ltd.**

**2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான VAT பொறுப்பின் கணிப்பீடு**

| | **வழங்கலின் பெறுமதி** | **வீதம் %** | | **VAT** |
|---|---|---|---|---|
| **<u>வெளியீட்டு வரி</u>** | | | | |
| வரி விதிக்கத்தக்க வழங்கல்கள் | 17,625,000 | 18% | | 3,172,500 |
| ஏற்றுமதி விற்பனைகள் | 18,500,000 | 0% | | - |
| உள்நாட்டு விற்பனைகள் - SVAT | 4,587,000 | 18% | | 825,660 |
| உள்நாட்டு விற்பனைகள் – மருந்தகப் பொருள்கள் | 1,543,000 | | | *Exempted* |
| **மொத்த வெளியீட்டு VAT** | **42,255,000** | | | **3,998,160** |
| **<u>உள்ளீட்டு வரி</u>** | | | | |
| இறக்குமதி மீது | | | 2,654,000 | |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது | | | 465,000 | |
| காருக்கான பழுதுபார்ப்புகள் மீது – *<u>அனுமதிக்கத்தகாதது</u>* | | | - | |
| மொத்தம் | | | 3,119,000 | |
| விதிவிலக்கான வழங்குநர்களுக்கான அனுமதிக்கத்தகாதவை (1,543 /42,255 x 3,119) | | | (113,895) | |
| முன்கொணரப்பட்ட உள்ளீட்டு வரி | | | 37,650 | |
| பூச்சிய மற்றும் SVAT வழங்கல்களுக்குக் காரணமானவை | | | 1,641,909 | |
| 100% வெளியீட்டு வரிக்கு மட்டுப்படுத்தப் பட்ட மீதி | | | 1,400,846 | |
| **மொத்த அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரி** | | | | **3,042,755** |
| செலுத்த வேண்டிய VAT | | | | 955,405 |
| கழி : SVAT செலவு உறுதிச்சீட்டுகள் | | | | (825,660) |
| கழி: மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள் | | | | (100,000) |
| **செலுத்த வேண்டிய மீதி VAT** | | | | **29,745** |

**(10 புள்ளிகள்)**

***வினா 07 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 4 – நானாவித முயற்சிகளின் வரிவிதிப்பு**

கற்றற் பேறுகள் - பங்குடமையின் வருமான வரியைக் கணிப்பிடுதல்

- பங்காளர்களின் வரிப் பரிப்பை மதிப்பிடுதல்

**(a)**

**Fat Mama's Kitchen**

**வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான**

**வருமான வரிப் பரிப்பின் கணிப்பீடு**

| | **ரூ.** |
|---|---:|
| மொத்த இலாபம் | 8,500,000 |
| **கழி :** | |
| சம்பளங்கள் - உதவியாளர்கள் | (3,000,000) |
| பங்காளர்களின் சம்பளங்கள் - கழிக்கப்படத்தக்கதல்ல | - |
| நன்கொடைகள் - கழிக்கப்படத்தக்கதல்ல | - |
| சமையலறை உபகரணங்கள் மீதான மூலதன விடுதொகை - 5 ஆண்டுகள் | (50,000) |
| பிற செலவினங்கள் | (124,000) |
| **பங்குடமையின் வணிக வருமானம்** | **5,326,000** |
| பங்குடமையின் வரி மதிக்கத்தக்க வருமானம் | 5,326,000 |
| **கழி: தகைமைக் கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்:** | |
| சிறுவர் இல்லத்திற்கான நன்கொடை – அனுமதிக்கத்தகாதது | - |
| வரி விதி வருமானம் - பங்குடமை | 5,326,000 |
| **செலுத்த வேண்டிய பங்குடமை வரியின் கணிப்பீடு** | |
| 1,000,000 @ 0% | - |
| 4,326,000 @ 6% | 259,560 |
| **மொத்த வரிப் பரிப்பு** | **259,560** |

**(08 புள்ளிகள்)**

**(b)**

**திருமதி நளினி**

**வரி மதிப்பாண்டு 2024/25 இற்காகச்**

**செலுத்த வேண்டிய வருமான வரிக்கான கணிப்பீடு**

| | ரூ. | | |
|---|---|---|---|
| பங்குடமை வருமானம் : | | | |
| சம்பளம் | | 1,800,000 | |
| இலாபப் பங்கு | | 863,000 | |
| வணிக வருமானம் | | | 2,663,000 |
| முதலீட்டு வருமானம் | | | 132,000 |
| வரி மதிக்கத்தக்க வருமானம் | | | 2,795,000 |
| கழி : தனிப்பட்ட நிவாரணம் | | | (1,200,000) |
| வரிவிதி வருமானம் | | | 1,595,000 |
| வரிப் பரிப்பு | | | |
| | 500,000 | 6% | 30,000 |
| | 500,000 | 12% | 60,000 |
| | 500,000 | 18% | 90,000 |
| | 95,000 | 24% | 22,800 |
| மொத்த வரிப் பரிப்பு | | | 161,400 |
| கழி : பங்குடமை வரிச் செலவு | | | (129,780) |
| **சென்மதி / வருமதி மீதி** | | | **31,620** |

5,326,000 x 50% = 2,663,000

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***வினா 08 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 2 வருமான மூலங்கள்**

**அலகு 3 தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் (வதிவிட) வருமான வரி மதிப்பீடு**

கற்றற் பேறுகள் -
- பல்வேறு வருமான மூலங்களில் இருந்தான வருமானத்தை மதிப்பிடுதல்
- ஒவ்வொரு வருமான மூலத்திலும் விலக்களிப்பு / உள்ளடக்கப்படாத உருப்படிகளை இனங்காணுதல்
- வதிவுள்ள தனியாள் மற்றும் ஒரு கம்பனியின் வரி மதிக்கத்தக்க வருமானம் (AI) மற்றும் வரிவிதி வருமானத்தை மதிப்பிடுதல்
- வதிவுள்ள தனியாள் மற்றும் ஒரு கம்பனியுடன் தொடர்புடைய தகைமைக் கொடுப்பனவுகளை இனங்காணுதல்
- தனிநபர்கள், கம்பனிகளின் மொத்த வருமான வரிப் பரிப்பை மதிப்பிடுதல்
- கிடைக்கக்கூடிய கழிப்பனவுகள் மற்றும் வரிச் செலவுகளை இனங்காணுதல்

**Rasara Food Pvt) Ltd.**

**வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான மீதி வருமான வரிப் பரிப்பின் கணிப்பீடு**

| | குறிப்பு | ரூ. |
|---|---|---|
| வணிக வருமானம் | அட்டவணை 1 | 11,424,340 |
| முதலீட்டு வருமானம் | அட்டவணை 2 | 2,033,500 |
| **(a) மொத்த வரி மதிக்கத்தக்க வருமானம்** | | **13,457,840** |
| கழி : தகைமைக் கொடுப்பனவுகள் | | |
| பாடசாலைக்குச் வழங்கப்பட்ட நன்கொடை | 650,000 | (650,000) |
| **(b) வரிவிதி வருமானம்** | | **12,807,840** |
| **(c) செலுத்த வேண்டிய மொத்த வரி** (12,807,840 x 30%) | | 3,842,352 |
| | | |
| கழி : வரிச் செலவுகள் : | | |
| செலுத்திய தவணைக் கட்டணம் | | (2,500,000) |
| வட்டி மீதான WHT செலவு @ 5% (768,500 x 5%) | | (38,425) |
| **(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி** | | **1,303,927** |

அட்டவணை 01 – வணிக வருமானம் :

## Rasara Food (Pvt) Ltd.

**வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வணிகத்திலிருந்தான வரிமதிக்கத்தக்க வருமானத்தின் கணிப்பீடு**

| | | | ரூ. (-) | ரூ. (+) |
|---|---|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | | | | 3,724,500 |
| **கழி : வரி விதிக்கத்தகாத வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம்** | | | | |
| விலைகோரப்பட்ட முதலீடுகள் மீதான சீர் மதிப்பு நயம் | | | 1,245,000 | |
| பங்கிலாப வருமானம் | | | 542,000 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மீதான கணக்கீட்டு இலாபங்கள் | | | 324,500 | |
| வணிகச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் மீதான தேறிய பரிமாற்ற நயம் - வரிவிதிக்கத்தக்கது | | | 865,800 | 4,315,800 |
| வட்டி வருமானம் | | | 2,033,500 | |
| **<u>சேர் : அனுமதிக்கத்தகாத செலவினங்கள்</u>** | | | | |
| கணக்கீட்டுத் தேய்மானமும் கடன் தீர்ப்பனவும் | | | | 4,200,000 |
| சொத்துப் பயன்பாட்டு உரிமையின் கடன் தீர்ப்பனவு | | | | 730,000 |
| நன்கொடை ஏற்பாடு | | | | 4,500,000 |
| ஆலோசனைக் கட்டணம் - அனுமதிக்கத்தகாதது (WHT கழிக்கப்படாத) | | | | 300,000 |
| அபராதங்களும் தண்டங்களும் | | | | 435,700 |
| அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு – அனுமதிக்கத்தக்கது (வசூலிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது) | | | | - |
| கடன்பட்டோருக்கான ஏற்பாடு | | | | 1,000,000 |
| CSR செலவினங்கள் - *அனுமதிக்கத்தகாதது* | | | | 650,000 |
| வணிகச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் மீதான தேறாத பரிமாற்ற நட்டங்கள் | | | | 3,450,000 |
| *<u>மேம்பாட்டுச் செலவினங்கள் - தேய்மானஞ் செய்யத்தக்க சொத்துக்கள்</u>* | | 1,476,000 | | |
| TWDV – முன்னைய ஆண்டின் முடிவில் | | | | |
| கிரயம் (Y/A 2021/22) | 6,500,000 | | | |
| WDV – 2024 மார்ச் 31 இல் | 2,600,000 | | | |
| 2024 மார்ச் 31 இல் 20% WDV இற்கு மட்டுப்படுத்தப்பட்ட மேம்பாட்டுச் செலவினங்களின் கழிப்பனவு | | | 520,000 | |
| அனுமதிக்கப்படாத தொகையும் தேய்மான அடிப்படைக்கு சேர்க்கப்பட்டவையும் | | | | 956,000 |
| *<u>PPE இன் விற்பனை</u>* | | | | |
| விற்பனை வருமானம் | | 400,000 | | |
| வரி WDV (1,450,000 – 1,450,000) | | **-** | | - |
| தேய்மானஞ் செய்யத்தக்க சொத்துக்களின் தேறுதல் மீதான வரிமதிக்கத்தக்க கட்டணம் | | | | 400,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை மீதான வட்டிக் கிரயம் | | | | 976,000 |
| *நிதிக் கிரயம் - மெல்லிய மூலதனவாக்கம்* | | | | |
| பங்கு மூலதனம் + ஒதுக்கங்கள் - எதிர்மறையான கைக்கொள் இலாபத்தைப் புறக்கணிக்க. | 1,000,000 | | | |
| 4 தடவைகள் | 4,000,000 | | | |
| கடன் பெறுகைகள் | 5,000,000 | | | |
| நிதிக் கிரயம் (838,000 + 1,645,700) | | 2,483,700 | | |
| அனுமதிக்கத்தக்க நிதிக் கிரயம் = நிதிக் கிரயம் / கடன் பெறுகை * 4 (SC + ஒதுக்கங்கள்) | | 1,986,960 | | |
| அனுமதிக்கத்தகாத நிதிக் கிரயம் - மீளவும் சேர்க்கப்பட்ட மற்றும் CF | | | | 496,740 |
| **கழி : அனுமதிக்கத்தக்க கழிப்பனவுகள்** | | | | |
| *தேய்மானஞ் செய்யத்தக்க சொத்துக்கள் மீதான மூலதன விடுதொகைகள்* | | | | |
| காணி – சொத்துப் பயன்பாட்டு உரிமை | 14,600,000 | no CA | - | |
| இயந்திரம் – புதிய (8,950,000 – 6,500,000) | 2,450,000 | 5 ஆண்டுகள் | 490,000 | |
| அலுவலக உபகரணம் | 536,000 | 5 ஆண்டுகள் | 107,200 | |
| கணினிகள் | 657,000 | 5 ஆண்டுகள் | 131,400 | |
| மோட்டார் வாகனங்கள் | 6,800,000 | No CA | - | |
| இயந்திரம் - பழையது (6,500,000/5 + 956,000/2) | | | 1,778,000 | |
| சொத்துப் பயன்பாட்டு உரிமை மீது செலுத்திய வாடகை | | | 1,650,000 | |
| செலுத்திய பணிக்கொடை | | | 1,234,000 | |
| | | | 10,921,400 | 26,134,740 |
| | | | | 15,213,340 |
| கழி : நிவாரணமற்ற இழப்புகள் | | | | (3,789,000) |
| **வணிக வருமானம்** | | | | **11,424,340** |

**அட்டவணை 2 – முதலீட்டு வருமானம்**

| | |
|---|---|
| திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடு மீதான வட்டி | 1,265,000 |
| நிலையான வைப்பு மீதான வட்டி | 768,500 |
| பங்கிலாப வருமானம் - இறுதி WHT | - |
| **முதலீட்டு வருமானம்** | **2,033,500** |

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***வினா 09 இற்காகப் பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**அலகு 2** வருமான மூலங்கள்

**அலகு 3** தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் (வதிவிட) வருமான வரி மதிப்பீடு

கற்றற் பேறுகள் - பல்வேறு வருமான மூலங்களில் இருந்தான வருமானத்தை மதிப்பிடுதல்

- ஒவ்வொரு வருமான மூலத்திலும் விலக்களிப்பு / உள்ளடக்கப்படாத உருப்படிகளை இனங்காணுதல்
- வதிவுள்ள தனியாள் மற்றும் ஒரு கம்பனியின் வரி மதிக்கத்தக்க வருமானம் (AI) மற்றும் வரிவிதி வருமானத்தை மதிப்பிடுதல்
- வதிவுள்ள தனியாள் மற்றும் ஒரு கம்பனியுடன் தொடர்புடைய தகைமைக் கொடுப்பனவுகளை இனங்காணுதல்
- தனிநபர்கள், கம்பனிகளின் மொத்த வருமான வரிப் பரிப்பை மதிப்பிடுதல்
- கிடைக்கக்கூடிய கழிப்பனவுகள் மற்றும் வரிச் செலவுகளை இனங்காணுதல்

**மஞ்சுள**

**வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான**

**வருமான வரிப் பரிப்பின் கணிப்பீடு** *(ரூ.)*

| | | | | |
|---|---|---|---|---|
| **ஊழிய வருமானம் :** | | | | |
| சம்பளம் | 400,000 x 12 | | | 4,800,000 |
| மிகையூதியம் | | | | 200,000 |
| வாகனப் படி | 50,000 x 12 | | | 600,000 |
| வதிவிடப் பெறுமதி | 400,000 x12.5% x 12 | எது குறைவானதோ அது | 600,000 | 600,000 |
| தொழில்தருநரால் செலுத்தப்பட்ட வாடகை | 75,000*12 | | 900,000 | |
| தொலைபேசிக் கட்டணம் (50% x 172,000) | | | | 86,000 |
| ஆயுள் காப்புறுதி தவணைப்பணம் | | | | 90,000 |
| வெளிநாட்டுப் பயணம் | வரி விதிக்கத்தக்கது அல்ல | | | - |
| **மொத்த ஊழிய வருமானம்** | | | | **6,376,000** |
| **வணிக வருமானம் :** | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | | 1,481,000 | |
| சேர் : தேய்மானம் | | | 875,000 | |
| நன்கொடை | | | 100,000 | |
| கழி : விற்பனை மீதான கணக்கீட்டு நயம் / (நட்டம்) | | | (152,000) | |
| அகற்றல் மீதான விற்பனை வருமானம் | | 1,325,000 | | |
| TWDV | 1,800,000/5*4 | (1,440,000) | | |
| சமப்படுத்தல் படி | | | (115,000) | |

| | | | | |
|---|---|---|---|---|
| கோரிக்கையிடப்படாத வணிக நட்டம் B/F | | | (350,000) | |
| **வணிக வருமானம்** | | | | **1,839,000** |
| **முதலீட்டு வருமானம்** | | | | |
| வாடகை வருமானம் (125,000 x 12) | | | 1,500,000 | |
| வட்டி : திறைசேரி உண்டியல் | | 153,000 | | |
| FD | | 85,000 | 238,000 | |
| பங்கிலாப வருமானம் | இறுதி WHT | | - | |
| பங்குகளின் விற்பனை – விலை கோரப்பட்ட பொதுக் கம்பனிகள் | வரி விலக்கு | | - | |
| **முதலீட்டு வருமானம்** | | | | **1,738,000** |
| **வரி மதிக்கத்தக்க வருமானம்** | | | | **9,953,000** |
| **கழி : தகைமைக் கொடுப்பனவுகள்** | | | | |
| தேசிய சிறுநீரக நிதியத்திற்கான நன்கொடை | | | | (100,000) |
| சிறுவர் இல்லத்திற்கான நன்கொடை - காசு | ரூ.75,000/- அல்லது TI இன் 1/3, எது குறைவானதோ அது | | | (75,000) |
| **நிவாரணங்கள்** | | | | |
| தனிப்பட்ட நிவாரணம் | | | 1,200,000 | |
| வாடகை நிவாரணம் | மொத்த வாடகையில் 25% | | 375,000 | (1,575,000) |
| சூரிய மின்சக்தி பெனல்களில் முதலீடு | வரையறுக்கப்பட்ட | | | (600,000) |
| **வரிவிதி வருமானம்** | | | | **7,603,000** |
| வரிப் பரிப்பு | | | | |
| | | 500,000 | 6% | 30,000 |
| | | 500,000 | 12% | 60,000 |
| | | 500,000 | 18% | 90,000 |
| | | 500,000 | 24% | 120,000 |
| | | 500,000 | 30% | 150,000 |
| | | 5,103,000 | 36% | 1,837,080 |
| மொத்த வரிப் பரிப்பு | | 7,603,000 | | **2,287,080** |
| கழி : வரிச் செலவுகள் | | | | |
| தவணைக் கொடுப்பனவுகள் | | | | (500,000) |
| APIT | | | | (1,413,360) |
| வட்டி மீதான AIT | | | | (4,250) |
| **செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்தியது)** | | | | **369,470** |

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி C முடிவு***